Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 316

வியாழக்கிழமை
09 ஒக்ரோபர் 2025

புரட்டாதி 23 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## ஜெனிவாவை வைத்து அரசியல் செய்யோம்!

கொழும்பு, ஒக். 9
ஜெனிவா விவகாரத்தை வைத்து ஒருபோதும் அரசியல் செய்யப்போவதில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும்

11

காணாமலாக்கப்பட்டோர் விவகாரம்

## 16,966 முறைப்பாடுகள்; 23க்கு மட்டுமே தீர்வு!

ஐ.நா. கடும் அதிருப்தி

**கொழும்பு, ஒக்ரோபர் 9**

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்துக்கு வழங்கப்பட்ட 16 ஆயிரத்து 966 முறைப்பாடுகளில் 23 முறைப்பாடுகளுக்கு மட்டுமே தீர்வு வழங்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபையின் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணைக்குழு குற்றஞ்சாட்டியுள்ளது.

11

## மின்கட்டணம் தொடர்பில் இன்னும் முடிவு இல்லை!

கொழும்பு, ஒக். 9
மின் கட்டணம் தொடர்பில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

11

## புதைகுழி அகழ்வில் இலங்கை பலவீனம்!

மரபணுக் கட்டமைப்பை உருவாக்குக ஐக்கிய நாடுகள் சபை அறிவுறுத்து

கொழும்பு, ஒக். 9
மனிதப் புதைகுழிகளை அகழ்வதில் இலங்கை மிகவும் பலவீனமான கட்டமைப்பைக் கொண்டுள்ளது. இந்தக் குறைபாடுகளைக் களைவதுடன், தேசிய மரபணுத் தரவுத்தளம் ஒன்றையும் இலங்கை

11

## விசாரணை வலையில் முன்னாள் எம்.பி.க்கள்

கொழும்பு, ஒக். 9
சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் மற்றும்

11





## அரியாலைக் கிராமத்தை குப்பைமேடாக்க முயற்சி

பொதுப்போக்குவரத்தை முடக்கி நேற்றுப் பெரும் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 9
அரியாலையில் குப்பைமேடு அமைக்கும் நல்லூர் பிரதேசசபையின் திட்டத்துக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்து, பொதுமக்கள் நேற்றுப் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

11

## அரியாலையில் அமைவது தரம் பிரிக்கும் நிலையமே

தவிசாளர் விளக்கம்

விரிவு பக்கம்:- 11

## ஷானியின் மனுக்களை விசாரிக்க அனுமதி!

கொழும்பு, ஒக். 9
குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி

11

**முச்சந்தி முரளி**

'இந்த லட்சணத்திலதான் உவையள் காணாமல் போனவைக்கு தீர்வு தரப்போயினம் கண்டியளோ'

புன்னாலைக்கட்டுவனில் கோரம்

## ஹன்டருடன் விபத்து; வயோதிபர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக். 9
ஹன்டர் மோட்டார்சைக்கிள் என்பன விபத்துக்கு உள்ளாகியதில் படுகாயமடைந்த வயோதிபர், மேலதிக சிகிச்சையின்போது

11




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### கொவிசெத

| | |
|---|---|
| திகதி | 08.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4218 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 13 17 47 74 |
| விசேட எழுத்து | P |

### ஹந்தஹண ராசி சுப பலன்

| | |
|---|---|
| திகதி | 08.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1285 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 05 12 40 61 |

### NLB ஜய

| | |
|---|---|
| திகதி | 08.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0244 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 2 6 0 3 |

### மெகா பவர்

| | |
|---|---|
| திகதி | 08.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2324 |
| ஆங்கில எழுத்து | D |
| சுப்பர் இலக்கம் | 24 |
| வெற்றி இலக்கங்கள் | 03 10 60 73 |

### மஹஜன சம்பத

| | |
|---|---|
| திகதி | 08.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5976 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 1 5 4 3 7 7 |

### தன நிதானய

| | |
|---|---|
| திகதி | 08.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2004 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 28 45 49 60 |
| விசேட எழுத்து | T |

### சுப தவசக்

| | |
|---|---|
| திகதி | 08.10.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0090 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 05 25 29 45 |

# தெளிவற்ற நிலையைக் கொண்டுள்ள இலங்கையின் வெளியுறவுக் கொள்கை

தயான் ஜயதிலக்க தெரிவிப்பு

**கொழும்பு, ஒக்.9**

**இலங்கை அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கை தொடர்பில் தெளிவற்றநிலை காணப்படுகின்றது என்று முன்னாள் சிரேஷ்ட இராஜதந்திரி கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்பேரவையில் இலங்கைக்குப் பாதகமாகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தைத் தர்க்கரீதியாக நிராகரித்த விடயம் தொடர்பில் ஜெனிவாவுக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதிக்கு அவர் பாராட்டும் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தர்க்க ரீதியாக நிராகரிக்கப்பட்டாலும் இந்தத் தீர்மானம் தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்க இலங்கை தவறியுள்ளது.

அதனால் இலங்கை தொடர்பான தீர்மானம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டமை வருந்தத்தக்கவிடயம்.

வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் எனக்கோரியிருந்தால் இலங்கைக்கு ஆதரவான சில நாடுகள் குரல் கொடுத்திருக்கும். வாக்கெடுப்பின்றி இந்தத் தீர்மானம்நிறைவேற்றப்பட்டமை சர்வதேச அரங்கில் இலங்கை தொடர்பிலான நன்மதிப்பைக் குறைவடையச்செய்யும். இது பாதகமான விடயம். இலங்கை அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கை என்ன என்பது புரியவில்லை - என்றார். (எ-இ)

### சுபிரி தன சம்பத

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 08.10.2025 | புதன்கிழமை | 0684 | E | 6 4 1 3 0 8 |

### Super Ball (DLB)

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 08.10.2025 | புதன்கிழமை | 2950 | F | 08 51 53 69 |

### சனிதா (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 08.10.2025 | புதன்கிழமை | W | 13 29 53 70 | 5111 |

### லக்ன ராசி (DLB)

| திகதி | தினம் | சிம்மம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 08.10.2025 | புதன்கிழமை | | 02 05 11 15 | 4662 |

### KAPRUKA (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 08.10.2025 | புதன்கிழமை | K | 37 | 07 08 10 58 | 2126 |

### அத கோடிபதி (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 08.10.2025 | புதன்கிழமை | R | 03 33 52 70 | 2776 |

### JAYODA (DLB)

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 08.10.2025 | புதன்கிழமை | A | 12 17 27 52 | 2168 |

# 323 கொள்கலன்கள் விடுவிப்பு; விசாரணைக்குக் குழு நியமனம்

கொழும்பு,ஒக்.9

கொழும்புத் துறைமுகத்தில் இருந்து 323 கொள்கலன்கள் கட்டாய ஆய்வுக்கு உட்படுத்தப்படாமல், சுங்க நடைமுறைகளை மீறி விடுவிக்கப்பட்டமை தொடர்பான சர்ச்சைக்குரிய வழக்கை விசாரணை செய்வதற்கு நாடாளுமன்றால் தேர்வுக்குழு நியமிக்கப்படவுள்ளது.

ஒழுங்கற்ற செயல்முறை காரணமாக விடுவிக்கப்பட்ட கொள்கலன்களின் உள்ளடக்கங்களுக்குப் பொறுப்பேற்க முடியாது என்று இலங்கை சுங்க அதிகாரிகள் சங்கம் பகிரங்கமாகக் கூறியுள்ளது. இத்தகைய குறைபாடுகள் போதைப்பொருள், துப்பாக்கிகள் அல்லது பிற தடைசெய்யப்பட்ட பொருள்களை நாட்டுக்குள் கடத்துவதற்கு வழிவகுத்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே முன்மொழியப்பட்ட தேர்வுக்குழு, கொள்கலன் வெளியீடுகளின் சட்டபூர்வத்தன்மையை விசாரணைசெய்து, பொறுப்பானவர்களை அடையாளங்கண்டு, ஏதேனும் ஏற்றுமதிகளில் சட்டவிரோதமான அல்லது தீங்கு விளைவிக்கும் பொருள்கள் உள்ளதா என்பதைத் தீர்மானிக்கும்.

அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியற் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் 30 உறுப்பினர்கள்வரை உள்ள இந்தக் குழுவுக்கு சபாநாயகர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட ஒருவர் தலைமை தாங்குவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

# மலையகத்தில் 3,250 புதிய வீடுகள்

கொழும்பு,ஒக்.9

3,250 தோட்டக் குடும்பங்களுக்கு புதிய வீடுகளை வழங்குவதற்காக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இயற்கை அனர்த்த நிலைமைகளால் தற்காலிக வீடுகளில் நீண்டகாலமாக வசித்துவருகின்ற 3,250 தோட்டக் குடும்பங்கள், பல படிமுறைகளுடன் கூடிய திட்டத்தின்கீழ் பாதுகாப்பான இடத்தில் மீண்டும் குடியேற்றும் நோக்கில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக 2025ஆம் ஆண்டில் 1,300 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ச-இ)



# வாகன இலக்கத் தகடுகள் 165,512 தேக்கம்

கொழும்பு, ஒக்.9

புதிய 165,512 வாகன இலக்கத்தகடுகள் இன்னும் விநியோகிக்கப்படவில்லை எனப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க நாடாளுமன்றில் ஒப்புக்கொண்டுள்ளார்.

நாங்கள் ஆரம்பத்தில் திட்டமிட்டதை விட வாகன இலக்கத்தகடுகளை வழங்குவது மிகவும் தாமதமாகியுள்ளது. பாதுகாப்பை மேம்படுத்த நாங்கள் எடுத்த முயற்சிகள் தாமதத்துக்கு வழிவகுத்துள்ளன.

இதேவேளை, புதிய சாரதி உரிமங்களை வழங்குவதில் உள்ள சிக்கல்கள் எதிர்வரும் 18 ஆம் திகதிக்குள் தீர்க்கப்படும் என்றும் போக்குவரத்து அமைச்சர் தெரிவித்தார். (ச-இ)

# முந்தைய ஆட்சிகளில் லைசென்ஸ் மோசடி!

கொழும்பு, ஒக்.9

இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக சாரதி அனுமதி உரிமங்களை அச்சிடுவதில் மிகப்பெரிய மோசடி நடந்துள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

சாரதி உரிமங்களை அச்சிடும் ஒப்பந்தத்தை ஒரு நிறுவனத்துக்கு வழங்குவதன்மூலம் பெரிய அளவில் நிதி வீணடிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# போதைப்பொருள் வழக்கு துரிதத்துக்கு பகுப்பாய்வாளர்கள் ஆட்சேர்ப்பு!

கொழும்பு, ஒக்.9

போதைப்பொருள்களை அடையாளங் காண்பதற்கான புதிய இரசாயன பகுப்பாய்வாளர்கள் 50 பேர் புதிதாக இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என்று பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். சிறைக்கைதிகளின் வழக்குகள் தொடர்பான பகுப்பாய்வு அறிக்கைகளில் ஏற்படும் தாமதத்தைத் தடுக்கவே இவ்வாறு ஐம்பது அரச இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் விரைவில் அரச இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்துக்கு நியமிக்கப்படுவார்கள் என்று அவர் கூறினார்.

அதேவேளை போதைப்பொருள் வழக்குகளில் சந்தேகநபர்கள் பயன்படுத்தும் போதை வகைகளை முறையாக அடையாளங்காண அரச பகுப்பாய்வாளரின் உதவி கோரப்படுகிறது, மேலும் அந்த அறிக்கைகளில் தாமதம் ஏற்படுவதற்கான காரணம் அரச பகுப்பாய்வாளர்களின் பற்றாக்குறையாகும். சிறைகளில் நெரிசல் அதிகரிப்பதற்கும் பகுப்பாய்வு அறிக்கைகளில் ஏற்படும் தாமதமே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மகாவம்ச நூலில்


# ஈழப்போர் தொடர்பான விடயங்களில் வரலாற்றுத் திரிபுகளுடன் தவறுகள்!

கொழும்பு, ஒக்.9

**இலங்கையின் வரலாற்று நூலான மகாவம்சத்தின் ஆறாவது தொகுதியில் (1978 முதல் 2010 வரையிலான காலப்பகுதி) மிகப்பெரிய வரலாற்றுத் திரிபுகள் இடம்பெற்றுள்ளன என்று அரசியல் ஆய்வாளர்கள் மற்றும் கல்வியியலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

மகாவம்சத்தை வெளியிடும் குழுவால் தயாரிக்கப்பட்ட இந்தப் புதிய தொகுதியில் குறிப்பாக ஈழப்போர் தொடர்பான விடயங்களில் கடுமையான தவறுகள் உள்ளதாக விமர்சிக்கப்படுகிறது. 1990 ஜூலை 10 அன்று கொக்காவில் இராணுவமுகாமின்மீது விடுதலைப்புலிகள் அமைப்பினர் நடத்திய தாக்குதல் பற்றிய குறிப்பில், லெப்டினன்ட் அலதெனிய ஒரு பீரங்கியை எடுத்துக்கொண்டு தொலைக்காட்சிக் கோபுரத்தில் ஏறி பயங்கரவாதிகள்மீது தாக்குதல் நடத்தியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பீரங்கி என்பது ஒருவரால் கோபுரத்தில் எடுத்துச் செல்லமுடியாத ஒரு கனரக ஆயுதமாகும்.

இத்தகைய பாரதூரமான தகவல் திரிபு இடம்பெற்றுள்ளது. அதேநேரம் தமிழீழ விடுதலைப்புலிகள் கண்டி தலதா மாளிகைத் தாக்குதலை நடத்திய ஒரு வாரத்துக்குப் பிறகு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டார் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டு சுமார் ஏழு ஆண்டுகளுக்குப் பின்னரே தலதா மாளிகைத் தாக்குதல் நடந்தது. வரலாற்று ஆவணங்களில் இத்தகைய திரிபுகள் சமூகப் பிரச்சினைகளை ஏற்படுத்தலாம் என்பதால் இந்தப் பிழைகளை அரசாங்கம் உடனடியாக மீளாய்வுசெய்து சரிசெய்ய வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதுகுறித்து புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் கமகெதர திஸாநாயக்க பதிலளிக்கையில், "வரலாறு மிகச் சரியாகப் பதிவு செய்யப்படவேண்டும். ஒரு வேளை தவறு நடந்திருந்தால், தொகுப்புக்குழுவுடன் பேசி உடனடியாகச் சரிசெய்யப்படும்" என்று உறுதியளித்துள்ளார். (ச-இ)



## டெங்கு, சிக்கன்குனியா பரவும் அபாயம்

கொழும்பு, ஒக்.9

இலங்கையில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக டெங்கு மற்றும் சிக்கன்குனியா நோய்கள் அதிகரிக்கும் அபாயம் உள்ளது என்று இலங்கை பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

குறிப்பாக மேற்கு மாகாணமும் தென் மாகாணமும் இந்த நோய்கள் பரவுவதற்கான அதிக அபாயப்பகுதிகளாகக் காணப்படுகின்றன. நுளம்பு இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் ஒத்துழைக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## போதைப்பொருள்கள் முறைப்பாடுகள் 8000+

கொழும்பு, ஒக்.9

போதைப்பொருள் மற்றும் சட்டவிரோதச் செயற்பாடுகள் தொடர்பில் பொலிஸ்மா அதிபரின் இலக்கத்துக்குக் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை 8 ஆயிரத்தைக் கடந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த முறைப்பாடுகளின் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதச் செயற்பாடுகள் தொடர்பில் பொதுமக்கள் துரிதமாக முறைப்பாடு செய்யும் வகையில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவினால் 0718598888 என்ற வட்ஸ்அப் இலக்கம் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



## பன்றிக்காய்ச்சல் பரவல் தடுப்பதற்கு வர்த்தமானி

கொழும்பு, ஒக்.9

நாடுமுழுவதும் பல பிரதேச செயலகப் பிரிவுகளில் கண்டறியப்பட்ட ஆபிரிக்கப் பன்றிக்காய்ச்சல் நோய் பரவுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அறிவிக்கும் அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் இந்த வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அதன்படி இலங்கையிலுள்ள அனைத்து மாவட்டங்களும் ஆபிரிக்கப் பன்றிக் காய்ச்சல் நோய் ஆபத்துப் பகுதிகளாகவும், பன்றிகள் கால்நடை நோய்கள் சட்டத்தின்கீழ் நோய் அபாய விலங்குகளாகவும் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த வர்த்தமானி செயற்படுத்தப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குச் செல்லுபடியாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

## நாகவிகாரையில் புண்ணிய பூஜை

யாழ்ப்பாணம், ஒக். 9

யாழ்ப்பாணம் சிறி நாகவிகாரை வணக்க ஸ்தலத்தில் வருடாந்தம் நடத்தப்பட்டு வருகின்ற, புண்ணிய பூஜை எதிர்வரும் 10ஆம் 11ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் சிறி நாகவிகாரையில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வு யாழ்ப்பாண பாதுகாப்புப் படை கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ரசிக குமார தலைமையில் நடைபெறவுள்ளது. அனைத்து மதங்களின் தலைவர்களும் கலந்துகொள்ளும் இந்தப் புண்ணிய பூஜையில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ச-இ)

## ஆடிப்போன ஐ.நா.

அட்டையைப் பிடிச்சு ஐ.நா.வில விட்டாலும் அது செத்தைக்குள்ளதான் போகும். அப்பிடி ஐ.நா.வில போய் சனத்தின்ர பிரச்சினையைப் பேசுறன் எண்டு, வெளிநாட்டுக்காரரின்ர காசில சுவிஸுக்குப் போன ஊசிக்கார எம்.பி., அங்க போய் தன்ர சொந்தச் சோகக்கதையைப் பாடிப்போட்டு வந்தன் எண்டு பெருமையாச் சொல்லியிருக்கிறார். ஒண்டில் ஐ.நா. மனித உரிமையள் பேரவை எண்டால் என்னவெண்டு அந்த ஊசிக்கார எம்.பி.க்குத் தெரியாமல் இருக்கோணும். இல்லாட்டி எங்கட சனத்தின்ர வலியள் அவருக்கு விளங்காமல் இருக்கோணும். ஆனால் வேதனை என்னெண்டால் இந்த ரண்டுமே அந்தாளுக்குத் தெரியாது எண்டதுதான்.


ஜெனிவாவில நடக்கிற மனித உரிமைகள் பேரவையின்ர அரையாண்டுக் கூட்டத்தில ஒவ்வொரு நாட்டிலையும் என்னென்ன மனித உரிமையள் மீறப்பட்டிருக்கு, மனித குலத்துக்கு எதிரா என்னென்ன குற்றங்கள் செய்யப்பட்டிருக்கு எண்டு ஆராய்ஞ்சு எதிர்காலத்தில அப்பிடி நடக்காமல் இருக்கிறதுக்காகச் செய்யவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்ஞ்சு முடிவெடுப்பினம். இஞ்சையிருந்து ஐ.நா.வில போய் எங்கட சனத்தின்ர பிரச்சினையளை அறம்புறமாப்பேசப்போறம் எண்டு ஜெனிவாவுக்குப் பறக்கிற எம்.பி.மார் அங்க மெயினா நடக்கிற கூட்டத்துக்குப் போகேலாது. பொக்கெட் மீட்டிங் மாதிரி உபகூட்டங்கள் நடக்கும். அதிலதான் இவையள் ஆளில்லாத கடையில ரீ ஆத்திப்போட்டு வருவினம். அந்த உபகூட்டங்களில பேசிற விசயங்கள் 'மெயினா' நடக்கிற பிரதிநிதியளின்ர கூட்டத்துக்கு போகவே போகாது. எண்டாலும் அடுத்தமுறைக்கூட்டத்துக்கு இந்த உபகூட்டங்களில கதைச்ச விசயங்களை வைச்சுக்கொண்டு, ஐ.நா.காரர் ஆய்வுகள் செய்யச் சான்ஸ் இருக்கு. மற்றும்படி என்னதான் உபகுழுக் கூட்டங்களில குத்திமுறிஞ்சாலும் ஒரு பிரியோசனமும் இல்லை. அதைவிடப் பகிடி என்னெண்டால், ஒவ்வொரு அமர்விலையும் ஆணையாளர் வாசிக்கப்போற அறிக்கை, நாலைஞ்சு கிழமைக்கு முதலே ரெடி ஆகிடும், பிறகெப்பிடி இவையின்ர உபகூட்டங்களில பேசுறதை அதில சேர்க்க ஏலும்?

அப்பிடிப்பட்ட அஞ்சுசதத்துக்கும் எங்கட கதையள் எடுபடாத ஐ.நா. அமர்வுக்கு முதல்முறையா இந்தமுறை ஊசிக்கார எம்.பி. போயிருக்கிறார். அங்க போனவர் 'தேசியத் தலைவர்' , 'வீரத்தமிழினம்', எண்டெல்லாம் உந்த உபகுழுக்கூட்டங்களில முழங்கி, அடுத்த ஆறுமாதத்துக்கு அன்ரியாக்களிட்ட காசைக் கறப்பார் எண்டு பார்த்தால், ஆளை ஒரு ஓரமாக் கதிரையில இருத்திப்போட்டாங்கள். இப்பிடித் தன்னை கதிரையில 'கப்சிப்'எண்டு இருத்திவைச்சது வெளியில தெரியாது எண்ட நினைப்பில ஆள் வழமை போல, எல்லாம் முடிய ஒரு பேஸ்புக் லைவ் விட்டவர். 'நான் சொன்னதைக் கேட்டு ஐ.நா.வே ஆடிப்போட்டுது. இனி அரசாங்கத்துக்கு ஆப்பு வைக்கும் ஐ.நா' எண்டு அவர் முதலில சொல்ல, ஏதோ பெரிசாச் சம்பவம் செய்திட்டார் எண்டுதான் எல்லாரும் பூந்துபார்த்தவை. ஆனால் "என்னை ட்ரபிக் கேஸில பொலிஸ் பிடிக்குது, பார்லிமெண்டில பேச நேரம் தருகினம் இல்லை, பார்லிமெண்ட் ரொய்லெட்டை நேரத்துக்கே பூட்டுகினம், எனக்குப் போனில ஆரோவெல்லாம் கொலைசெய்வம் எண்டு வெருட்டுறாங்கள்" எண்டு 'தங்கத்தோட' கதைக்கவேண்டியதையெல்லாம், ஊசிக்காரர் ஐ.நா.வில அலம்பினதெண்டு அடிச்சுவிட்டிருக்கிறார். அதைவிட எல்லாத்துக்கும் மாதக்கணக்கில ரெடி பண்ணின ஆதாரங்களையும் குடுத்தவராம். அதைவைச்சு அரசாங்கத்துக்கு ஐ.நா. அடிகுடுக்கும் எண்டெல்லாம் வெடிச்சுத் தள்ளியிருக்கிறார். இடம்,பொருள், ஏவல் தெரியாமல் கதைக்கிறதுகளை ஐ.நாவுக்குக் கூப்பிட்டால் ஏவல்பேயள் மாதிரி இப்பிடி ஏதாவது உளறத்தான் செய் வினம் கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமாகச் செயற்படும் நாள். தந்தை வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். சகோதரர்கள் குடும்பம் தொடர்பான விஷயத்தில் உங்களிடம் ஆலோசனைகேட்டு வருவார்கள். சிலருக்கு அவ்வப்போது சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும். மாலையில் பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** இன்றைக்குப் புதிய முயற்சிகளைத் தவிர்த்து விடுவது நல்லது. சிலருக்கு நண்பர்கள் மூலம் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். தாய்வழி உறவினர்கள்மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஒத்துழைப்புத் தருவார்.

**மிதுனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். மனதுக்கு மகிழ்ச்சிதரும் சம்பவம் நடைபெறும். பிள்ளைகளின் உற்சாகம் உங்களையும் தொற்றிக்கொள்ளும். சகோதரர்கள் மூலம் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தாயின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள்.

**கடகம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். என்றாலும் தேவையான பணம் கையில் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். சிலருக்குத் தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். காரியங்கள் அனுகூலமாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் பொருள்சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. உங்கள் தேவையறிந்து நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சிதரும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** பலவகைகளிலும் அனுகூலமான நாள். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்தநாள். ஆனாலும் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம்.

**துலாம்:** உறவினர்கள் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். சிலருக்கு வாழ்க்கைத்துணையின்மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உங்கள் முயற்சியில் எதிர்ப்புகளைக் கடந்து வெற்றிபெறுவீர்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**விருச்சிகம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். உடல்நலனில் கவனம்தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படும். பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாக கணவன் - மனைவிக்கிடையே பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச்செல்வது நல்லது.

**மகரம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிபெறும். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள்மூலம் ஆதாயம் கிடைக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கும்பம்:** சிலருக்குத் தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண் சச்சரவுகள் ஏற்படும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. சிலர் குடும்பத்துடன் வீட்டில் தெய்வவழிபாடு செய்வீர்கள்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தினர் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் தருவார்கள்.




# அஞ்சாத அஞ்சல் சேவை

கே.எஸ். சிவஞானராஜா

உலகளாவிய ரீதயில், வெகுசனத்தொடர்பாடலை வெற்றிகரமாகச் செயற்படுத்தவல்ல, பழைமை வாய்ந்த, இரகசியம் கொண்ட, நம்பிக்கைமிக்க தூயசேவையாக அஞ்சல் சேவை அன்றும் இன்றும் மிளிர்கிறது என்ற பெருமையோடு, 150வருடங்களைக் கடந்து உலக அஞ்சல் தினம் கொண்டாடப்படுகிறது.

மனித உறவுகளையும், உணர்வுகளையும் தவிக்கவோ தவிர்க்கவோவிடாது உயிரோடு வைத்திருக்கவல்ல ஒருதலை சிறந்த சமூக சஞ்சரிக்கும் ஊடகம் அஞ்சல் சேவையாகும். உலகில் வாழும் 820 கோடிமக்களையும் அரவணைக்கவல்ல முன்னணி முதல் தொடர்புச்சாதனம் இதுவாகும். எங்கோ ஒரு வீதியில் மூலைமுடுக்கில் நிலையாக வைக்கப்பட்ட தபால்பெட்டியில் முத்திரைப்பெறுமதியோடு ஒட்டப்பட்டுப் போடப்பட்ட கடிதங்கள், அதில் விலாசமிடப்பட்டவர் அமெரிக்காவோ, ஆபிரிக்காவோ, அவுஸ்திரேலியாவோ, இலங்கையோ அது எந்த நாடாக இருந்தாலும் சரி அவரவர் விலாசதாரருக்குப் பிந்தாமலும்தவறாமலும்கிடைக்கிறதென்றால் அந்தப் பணி இலகுவானதா? இல்லையில்லை. அது புனிதமானது, தெய்வீகமானது, கண்ணியமானது, காத்திரமானது, புண்ணியமானது.

ஏறத்தாழ 4000 தபாலகங்கள் இலங்கையில் சேவையாற்றுகின்றன. இதற்குள் பிரதம, உபதபாலகங்கள் அடங்குகின்றன. விரைவு தபால்சேவை, தபால்சேவை, தந்திசேவை, பணப்பரிமாற்றம், உபகாரசேவை, ஓய்வூதியசேவை, சேமிப்பு வங்கிச் சேவை, மணி ஓர்டர் சேவை, பொதிகள் சேவை, மின்சார, தொலைபேசிக் கட்டணசேவை, பதிவுத் தபால் சேவை, முத்திரை வழங்கற்சேவை, தண்டப் பணம் கட்டும்சேவை, தபாலடையாள அட்டை வழங்கும் சேவை, காப்புறுதிச்சேவை, நிழற்பிரதிச் சேவை, உற்பத்தி ஊக்குவிப்புச் சேவை, பயனாளிகளுக்கான அடிப்படை வசதிகள் என உலகத்தரத்தில் தபாலகங்கள் முன்னேறி வளர்ச்சி கண்டுள்ளன.

ஆரம்ப காலக்கட்டத்தில் செய்திப்பரிமாற்றம், புறாக்கள், குரல் ஒலி, அம்பு, மரதன் ஓட்டம், குதிரை வண்டில் ஆகியவை மூலமாகச் செவ்வனே நடைபெற்றன. விளையாட்டுப்போட்டிகளில் நடைபெறும் மரதன் ஓட்டப்போட்டியின் மூலாதாரப்புள்ளி அஞ்சல் சேவையை அடிப்படையாகக் கொண்டதாகும். உள்நாட்டுக்குள் கடிதம் அனுப்புவதாயின் ஐம்பது ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்டுள்ள கடித



உறைக்குள் கடிதம் வைக்கப்பட்டு கடித வாய் ஒட்டப்பட்டு, சரியான விலாசம் உறையின் வலது பக்கமாக நேராக, நேர்த்தியாக எழுதப்பட்டு தபால்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னதாக இடப்படுமாக இருந்தால் அடுத்த நாளிலேயே உரிய விலாசதாரருக்கும் கிடைக்கும்.

எந்தவிதமான செய்தியேயானாலும், மிகவும் பாதுகாப்பாக உரியவருக்குப் போய்ச்சேரும். இப்பணிக்காக, மக்களாகிய நாம் அஞ்சல் குடும்பத்தவர்களை அஞ்சல் தினத்திலாவது நேரிலே சென்று வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளோம்.

# ஞானச்சுடர் சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.9

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வாக ஞானச்சுடர் சஞ்சிகையின் 333ஆவது இதழ் வெளியீட்டு நிகழ்வு ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ச-41-66)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.9

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய உபயகாரர் பொதுச்சபைக்கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. ஆலய உபயகாரர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஆலய பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர். (ச-41,63)



கிழக்கு மாகாணத்திலுள்ள அறநெறிப்பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான சீருடைத்துணிகள் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் அண்மையில் வழங்கிவைக்கப்பட்டன. அம்பாறை திருக்கோவில், பூம்புகார் அறநெறிப்பாடசாலைகளைச் சேர்ந்த 97 மாணவர்களுக்கும் திருகோணமலை ஈச்சிலம்பத்தைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஏழு அறநெறிப்பாடசாலைகளைச் சேர்ந்த 337 மாணவர்களுக்குமாக மொத்தம் 434 மாணவர்களுக்கு புதிய சீருடைத்துணிகள் கையளிக்கப்பட்டன. (ச-25,66,40)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

சில நேரங்களில் நீங்கள் வெற்றிபெறுகிறீர்கள்,
சில நேரங்களில் நீங்கள் கற்றுக்கொள்கிறீர்கள்.

– பில் மெக்ரா –


# எமக்கான குரல்களை அரவணைப்போம்

"செம்மணிப் புதைகுழியில் இருந்து மீட்கப்படும் என்புக்கூடுகள், படுகொலைகளின் பிரதான சாட்சியங்களாகவே அமைந்துள்ளன. ஆதலால், இந்த விடயத்தில் சர்வதேசவிசாரணை அவசியம்" என்றவாறாகத் திட்டவட்டமாக வலியுறுத்தியிருக்கின்றார் தேசிய சமாதானப் பேரவையின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான ஜெஹான் பெரேரா. இலங்கையில் மாறிமாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள், தமிழர்களைப் போதும் போதும் என்னும் அளவுக்கு ஏமாற்றியுள்ளன. ஆதலால், சர்வதேச விசாரணை மட்டுமே தமக்குத் தேவை என்று தமிழர்கள் கோருவதில் எந்தத் தவறும் இல்லை என்றும் இயம்பியிருக்கின்றார் அவர். தேசிய சமாதானப் பேரவையின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான ஜெஹான் பெரேரா இலங்கையில் விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய மிகச் சொற்ப அளவிலான இடதுசாரிச் சிந்தனையாளர்களில் ஒருவர். சமூக சமத்துவத்தையும், சிறுபான்மை மக்களுக்கு நீதியையும் அவர் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றார். ஆதலால், ஜெஹான் பெரேரா இத்தகைய கருத்துகளை வெளிப்படுத்தியிருப்பதில் ஆச்சரியமேதுமில்லை. அவருடைய கருத்துகள் ஒவ்வொன்றும் ஆழ்ந்து நோக்கப்படவேண்டியவையும்கூட. இன்னும் சொல்லப்போனால், ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கத்தின் கடந்த 12 மாத கால ஆட்சியை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் வைத்து ஐரோப்பிய ஒன்றியம் பகுதியளவில் பாராட்டியுள்ள பின்னணியில், ஜெஹான் பெரேரா யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பும் தெரிவித்த கருத்துகளும் காலத்தேவையான காத்திரமான நடவடிக்கைகளாகவும் அமைந்துள்ளன.

போரின் பின்னர், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியற் கைதிகளின் விடுதலை, காணி விடுவிப்பு, பௌத்தமயமாக்கல், இராணுவக் குறைப்பு, பயங்கரவாதத்தடைச்சட்ட நீக்கம், புதிய அரசியலமைப்பு மற்றும் செம்மணிப்புதைகுழி என எத்தனையோ விடயங்களில் ஈழத்தமிழர்கள் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றனர். அந்தப் போராட்டங்கள் மீண்டும், மீண்டும் ஒரு குறுகிய வட்டத்துக்குள்தான் நிற்கின்றனவே தவிர, இத்தகைய சிங்கள மக்களுக்குள்ளேயே ஒலிக்கும் எமக்கான குரல்களை அரவணைத்ததாகவோ அல்லது முன்னிலைப்படுத்தியதாகவோ வரலாறு இல்லை. இனவாதச் சகதி நிறைந்த இலங்கை போன்றதொரு நாட்டில் இடதுசாரிகளின் குரல்கள் ஓங்கி ஒலிக்க வேண்டும். தமிழ்த் தலைமைகள் தமது அரசியலோட்டத்தில் திஸ்ஸ விதாரண, டியூ குணசேகர, விக்கிரமபாகு கருணாரட்ண, சிறிதுங்க ஜயசூரிய, ஜெஹான் பெரேரா போன்ற இடதுசாரி ஆளுமைகளுடன் ஒன்றித்துப் பயணப்படவேண்டும். ஆனால், இந்த விடயத்தில் வரலாற்றுத்தவறுகள் தொடர்ந்தும் இழைக்கப்பட்டு வருகின்றன.


தமிழர் தரப்பிலுள்ள கோடரிக்காம்புகளை சிங்கள இனவாதிகள் தெரிந்தெடுத்து தமது அரசியல் அபிலாஷைகளுக்காக நீண்டகாலமாகப் பயன்படுத்தி வருகின்றனர். நாம் தொடர்ந்தும் சபிக்கப்பட்ட இனமாக இருப்பதற்கு இதுவும் ஒரு காரணம். கோடரிக்காம்புகளைப் பயன்படுத்திக் கதைகளைக் கூறும்போது சர்வதேசமும் நம்பும், உள்ளக அரசியலிலும் அது எடுபடும் என்ற இராஜதந்திரம் சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கு இருக்கும்போது, ஜனநாயக நீரோட்டத்தில் ஆழ ஊடுருவிய சிங்கள இடதுசாரிகளை நாம் எமக்காகப் பயன்படுத்தத் தவறியமை துரதிர்ஷ்டவசமானது. விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்படுவதற்கு முன்னர், இனப்பிரச்சினைக்கான தீர்வுக்காக முன்னெடுக்கப்பட்ட அனைத்துக்கட்சிக் கூட்டங்களுக்கு இடதுசாரிகளே தலைமை தாங்கினார்கள். அதை உணர்வது காலத்தேவையானது.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




# பொதுத்துறையின் ஊதியத்தை சீர்திருத்தம் செய்வது அவசியம்

## உலக வங்கி பரிந்துரை




கொழும்பு, ஒக்.9

**புதிய ஊதியக் கட்டமைப்பு மற்றும் அனைவருக்கும் நியாயமான ஊதிய முறை ஆகியவற்றுடன் இலங்கையின் பொதுத்துறையின் ஊதியங்களுக்கான சீர்திருத்தங்களை மேற்கொள்ளவேண்டும் என்று உலக வங்கி அரசுக்குப் பரிந்துரைத்துள்ளது.**

இலங்கையின் பொருளாதார நிலைமை தொடர்பாக அண்மையில் அறிக்கையை வெளியிட்ட உலக வங்கி, அரசாங்கத்தின் செலவினங்களில் 80 சதவீதத்துக்கும் அதிகமானவை பொதுத்துறை ஊழியர்களின் ஊதியங்கள் மற்றும் நலத்திட்டங்களுக்காக ஒதுக்கப்படுகின்றன என்று சுட்டிக்காட்டியுள்ளது.
இலங்கையின் சமீபத்திய பொருளாதார செயற்றிறன் வலுவாக இருந்தாலும், பொருளாதாரம் மீண்டுவருவது இன்னும் முழுமையடையவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ள அந்த அறிக்கை, வறுமை கணிசமாக அதிகரித்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளது.
செலவினங்களின் அளவை அதிகரிக்கவோ அல்லது குறைக்கவோ உள்ள வாய்ப்புகள் குறைவாக இருப்பதால், தற்போதுள்ள அரசாங்கத்தின் செலவினங்களில் சலுகைகளை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-இ)

## ஜே.வி.பி. கூட்டத்தில் துப்பாக்கிச்சூடு; குற்றவாளியின் தூக்கு உறுதி

கொழும்பு, ஒக்.9
2011ஆம் ஆண்டு தங்காலையில் மக்கள் விடுதலை முன்னணி நடத்திய கூட்டத்தில் இருவரைச் சுட்டுக்கொலை செய்த வழக்கில் குற்றவாளியான ஜுலம்பிடிய அமரேவுக்கு தங்காலை மேல் நீதிமன்றம் வழங்கிய தூக்குத்தண்டனையை உயர்நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை உறுதிசெய்தது.
ஜுலம்பிடிய அமரே தாக்கல் செய்த சிறப்பு மேன்முறையீட்டு மனுவை விசாரிக்காமல் தள்ளுபடி செய்த உயர் நீதிமன்றம் தூக்குத்தண்டனையை உறுதிசெய்துள்ளது. (எ-இ)

## பெண் மருத்துவர் துஷ்பிரயோகம்; சந்தேகநபருக்கு பிணை

அநுராதபுரம், ஒக்.9
அநுராதபுரம் போதனா மருத்துவமனையின் பெண் பயிற்சி மருத்துவரைத் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் ஏழு மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் சிப்பாய் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டார்.
அநுராதபுரம் நீதிவான் நாலக சஞ்சீவ ஜெயசூரிய இந்த உத்தரவைப் பிறப்பித்தார். (ச-இ)

## ஐஸ் போதையுடன் இளம் தம்பதி கைது

மட்டக்களப்பு, ஒக்.9
மட்டக்களப்பு, வாழைச்சேனையில் 2 கிலோ 30 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் இளம் தம்பதி கடந்த திங்கட்கிழமை வாழைச்சேனைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் ஆகக்கூடிய தொகையிலான ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றலாக இது பதிவாகியுள்ளது என்றும் வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)



## அரச சொத்துகள் கையிருப்பு உயர்வு

கொழும்பு, ஒக்.9
இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வக் கையிருப்புச் சொத்துகள் அதிகரிப்பைப்பதிவுசெய்துள்ளன. கடந்த ஓகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடுகையில் செப்ரெம்பர் மாதத்தில் 1.1 வீதம் அதிகரித்துள்ளது.
இலங்கையின் உத்தியோகபூர்வ கையிருப்புச்சொத்துகள் கடந்த ஓகஸ்ட் மாதத்தில் 6.17 பில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியிருந்த நிலையில், செப்ரெம்பர் மாதத்தில் 6.24 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது . (ச-இ)

நாளை
வெள்ளிக்கிழமை - புரட்டாதி 24
10.10.2025
சுபநேரம் : 06.02 - 07.32
ராகுகாலம் : 10.32 - 12.02

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்கள் – மாணவர்கள் உறவுகளில் இன்று விரிசல்

## உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தின் தலைவர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம்,ஒக்.8

**சிறுவர்களை இலக்கு நோக்கிப் பயணிக்கவைப்பது ஆசிரியர்களின் கடமை. ஆனால் இன்று ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமான இடைவெளி அதிகரிக்கின்றது என்று உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ப.தர்மகுமாரன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியில் சிறுவர் தினத்தையொட்டி விளையாட்டு உபகரணங்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் கல்விக் கொள்கைகள் அரசின் உயர்மட்டத்தினால் உருவாக்கப்பட்டாலும் அவை சரியாக மாணவரைப் போய்ச் சென்றடைய வழிவகுப்பது ஆசிரியர்களே.

மாணவர்களும் தங்களைச் சுயமாக வளாகத்திலே நடமாட விடும் ஆசிரியர்களையே அதிகமாக விரும்புகிறார்கள். அடிக்கடி ஒழுக்கம், நடத்தை, சீருடை, முன்னேற்றம் பற்றிக் கதைக்கும் ஆசிரியர்களை இயல்பாகவே வெறுக்கிறார்கள்.

சிறுவர்களை இலக்கு நோக்கிப் பயணிக்கவைப்பது ஆசிரியர்களின் தார்மீகக் கடமை. இன்றைய மாணவர்கள் ஏனோதானோ என்று வாழ்கின்றார்கள்.

எதிலும் அக்கறையற்றவர்களாகவும் பொறுப்பற்றவர்களாகவும் செயற்படுகின்றனர்.

ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமான இடைவெளி அதிகரிக்கின்றது.

பாடசாலையின் எல்லா நடவடிக்கைகளும் ஆசிரியர் - மாணவர் உறவின் ஊடாகவே நகர்த்தப்பட வேண்டும்.

அந்த உறவு பாடசாலையின் வகுப்பறைச் சுவர்களையும் தாண்டிய சமூக வாழ்வியல்வரை நீடிக்க வேண்டும். மாணவர்களின் கல்வித்திறனை மேம்படுத்துவதைப் போலவே, நல்ல பண்புகளையும் வளர்த்தெடுக்க வேண்டியது பாடசாலைகளின் பொறுப்பே- என்றார். (ச-27)



# சுற்றுலாத்துறை தொடர்பாக இளைஞர்களுக்குப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஒக்.9

சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவம் தொடர்பாக இளைஞர்களுக்கான தொழிற்பயிற்சி வேலைத்திட்டம் யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்படும் அஸ்வெசும வேலைத்திட்டத்தின் கீழ் நன்மை பெறும் குடும்பங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட இளைஞர்களுக்கு இந்தப் பயிற்சி வழங்கப்படும். நிகழ்வில் புலமைப்பரிசில் வழங்கல் மற்றும் பயிற்சிநெறிக்கான பங்குதாரர் ஒப்பந்தத்தில் இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவத் தலைவர், சர்வதேச அறிவுத் தடாகத்தின் தலைவர் ஆகியோர் கையொப்பமிடல் உள்ளிட்ட நிகழ்வுகளும் இடம்பெற்றன. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் 20 ஆயிரம் சுற்றுலாத்துறை வல்லுநர்களை உருவாக்குவதை நோக்காகக்கொண்டு குறித்த தொழிற்பயிற்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (க-66)

வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் சப்பறத் திருவிழா நாளான கடந்த சனிக்கிழமை முதல் சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவான கடந்த திங்கட்கிழமை வரையான மூன்று தினங்களும் இலங்கை முதலுதவிச்சங்க இந்துசமயத் தொண்டர் சபையினர் பக்தர்களுக்கான ஒழுங்கமைப்பு, பாதுகாப்பு, கண்காணிப்பு மற்றும் முதலுதவி ஆகிய பணிகளில் ஈடுபட்டிருந்தனர். (ச-41-66)








சர்வதேச ஆசிரியர்தின நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியின் சோமசுந்தரப்புலவர் அரங்கில் நடைபெற்றது. (ச-இ)







கிளிநொச்சி தருமபுரம் மத்திய கல்லூரியின் பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு இரத்ததான முகாம் நேற்று புதன்கிழமை கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பழைய மாணவர்கள் மற்றும் உயர்தர மாணவர்கள் கலந்துகொண்டு குருதிக் கொடையை வழங்கினர். (ச-41-113)

# மருத்துவமனையின் அக்கறையீனமே சிசுவின் தாயின் உயிரைப் பறித்தது!

## உறவினர்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு,ஒக்.9

இரண்டு மாதங்களான சிசுவின் தாயின் உயிரிழப்புக்கு முல்லைத்தீவு மருத்துவமனையின் அலட்சியமே காரணமென உயிரிழந்த பெண்ணின் உறவினர்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

'கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் குறித்த பெண் சத்திர சிகிச்சைமூலம் குழந்தை பிரசவித்திருந்தார். கடந்த 26ஆம் திகதி அவருக்கு இடுப்புவலி ஏற்பட்டதையடுத்து தனியார் மருத்துவமனையில் சேர்த்து பரிசோதித்தபோது கிட்னியிலும், குருதியிலும் கிருமித்தாக்கம் உள்ளது என்றும் உடனடியான அரச மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுமாறும் பணிக்கப்பட்டது.

அதற்கமைவாக கடந்த 28ஆம் திகதி முல்லைத்தீவு - மாஞ்சோலை மருத்துவமனையில் அவரைச் சேர்த்தோம். அங்கு அவரைச் சாதாரண நோயாளர் வார்ட்டில் அனுமதித்ததுடன் சேலைன் மட்டுமே ஏற்றியிருந்தார்கள். வேறு எந்தவித சிகிச்சையும் வழங்கப்படவில்லை.

அன்றையதினம் மாலை அவரை யாழ்ப்பாணம் மருத்துவமனைக்கு மாற்றினர். எனினும் அவர் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் போதுமான துறைசார் மருத்துவர்களும் இல்லை. வசதியும் இல்லை. முல்லைத்தீவில் 80 வீதம் வேற்றுமொழி பேசுவோரும், 20வீதம் தமிழர்களும் நிர்வாகிகளாக உள்ளனர். இதனால் தமிழ் மக்களின் பிரச்சினைகள் சரியாகப் புரியப்படுவதில்லை' என்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர். (க-35)



# மன்னார் மாவட்டத்தில் வீடுகள் கையளிப்பு

மன்னார், ஒக்.9

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் மானிய வீட்டுத்திட்டத்தின்கீழ் மன்னார் மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட 30 வீடுகள் வைபவரீதியாக கடந்த திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டுள்ளன.

மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு மற்றும் மடு ஆகிய ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளில் தலா 6 பயனாளிகள் வீதம் 30 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டனர். அதற்கமைவாக ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில் பயனாளிகளின் மேலதிக நிதிச் செலவீட்டுடன் குறித்த வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன், பிரதேச செயலாளர்கள், திட்டமிடல் அதிகாரி, மன்னார் மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-25, 56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் நிகழ்ச்சிநிரலில் ஆசிரியர்கள் இடமாற்றம்

## உடன் தடுத்துநிறுத்துமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஒக்.9

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள ஆசிரிய இடமாற்றப்பட்டியல் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரசன்னம் இன்றி வெளியிடப்பட்டுள்ளது.சேவையின் தேவை கருதிய இடமாற்றம் என்ற பெயரில் ஆசிரியர்கள் பழிவாங்கப்பட்டுள்ளனர் என இலங்கை ஆசிரியர் சங்கம் குற் றஞ்சாட்டியுள்ளது.**

இதுதொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் தீபன் திலீசன் நேற்றுப் புதன்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

ஏலவே வெளிமாவட்டச் சேவையை யும், வெளிமா வட்டச் சேவையை ஒத்த சேவையையும் தமது சேவை நிபந்தனைக் காலத் துக்கு மேலதிகமாகவும் பூர்த்திசெய்துள்ள பல ரது பெயர்கள் இடமாற்றப்பட்டிய லில் இடம்பெற்றுள்ளன. இது தற்செயலாகவோ, தவறுதலாகவோ இடம்பெற்ற விடயமல்ல. வட மாகாணக் கல்வியைக் குழப்பும் செயற்பாடே இதுவாகும். அரசியல் நிகழ்ச்சி நிரலுக்குள் நின்றுகொண்டு வேண்டுமென்றே பழிவாங்கும்முகமாக குறித்த இடமாற்றப்பட்டியல் இடம்பெற்றுள்ளது. அரசியல் நிகழ்ச்சிநிரலில் நடைபெற்ற குறித்த இடமாற்றங் கள் நிறுத்தப்படவேண்டும்.

குறித்த இடமாற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஆசி ரியர்களுடனான தொழிற்சங்கச் செயற்பாடுகள் குறித்த கலந்துரையாடல் எதிர் வரும் சனிக்கி ழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் சுண் டுக்குளியில் அமைந்துள்ள கிளீன் பீல்ட் விளை யாட்டுக்கழக மண்டபத்தில் நடைபெறும் - என் றுள்ளது. (ச-66)





உலக அஞ்சல் தினைத்தை முன்னிட்டு காங்கேசன்துறை அஞ்சல் அலுவலகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு நேற்று இடம்பெற்றது. காங்கேசன்துறை தபால் நிலையத் தபால் அதிபர் ரி. சித்துறுபா தலைமையில் நடைபெற்ற இரத்தான முகாமில் அஞ்சல் நிலைய உத்தியோகத்தர் கள், ஊழியர்கள் கலந்துகொண்டனர். (ச-20)


**MUNICIPAL COUNCIL, JAFFNA**
**Procurement of Goods & Services for Jaffna Public Library – Library Digitalization Project**
**MODIFICATIONS AND ADDENDA IN BID DOCUMENT**

The period for issuing of tender documents for all the works under the Provincial Special grant Fund Works-2025 advertised through newspaper advertisement on 26.09.2025 has been extended up to 16.10.2025 at 2.00 PM. Closing date for submission of tenders and the date of opening of tenders has been extended up to 17.10.2025 at 11 AM. Further addenda and modifications made to the tender document have been sent to all suppliers who have received tender documents.

**Chairman,**
**Regional Procurement Committee,**
**Municipal Council, Jaffna**

**09-10-2025**

## இடர் முகாமைத்துவக் கலந்துரையாடல்



யாழ்ப்பாணம், ஒக்.9

தேசிய அனர்த்த முகாமைத்துவப் பிரிவினால் வட கீழ்பருவப் பெயர்ச்சிக் காலநிலைக்கான முன்னா யத்தக் கலந்துரையாடல் உதவிப் பிரதேச செயலா ளர் க.பார்த்திபன் தலைமையில் நேற்றுப் புதன்கி ழமை வேலணைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலக அனர்த்த முகா மைத்துவப் பிரதிப்பணிப்பாளர் சூரிய ராஜ், வேல ணைப் பிரதேசசபைத் தவிசாளர் சி.அசோக்கு மார், பிரதேச செயலக கிராம அலுவலர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் இவ்விட யத்துடன்தொடர்புடைய அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41-9)

**மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி**



உதிர்வு
05 . 01 . 1952

உதிர்வு
12 . 10 . 2022

**அமரர் சறோஜினிதேவி நாகேந்திரன்**
**(ஓய்வுபெற்ற பிரதி முகாமையாளர் மக்கள் வங்கி)**

**திதி : 09.10.2025**

அள்ளிக் கொஞ்ச வேண்டிய
அழகான பொக்கிஷத்தை
கொள்ளையடித்துக்கொண்டு போய்விட்டன
கோலத் தேவதைகள்
எட்டாத தூரம் சென்றுவிட்டீர்கள் அம்மா
ஏக்கத்துடன் இங்கே காத்திருக்கின்றோம்

அம்மாவின் ஆத்மா இறைபதம்
சரணடைய பிரார்த்திப்போம்


'நேசவாசா'
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(CR 00000) A

**மரண அறிவித்தல்**

தோற்றம்
15 . 07 . 1958



மறைவு
06 . 10 . 2025

**கோண்டாவிலை பிறப்பிடமாகவும் இந்தியா சென்னையை வசிப்பிடமாகவும் கொண்ட**

**பொன்மாணிக்கம் இராமமூர்த்தி**

அவர்கள் 06.10.2025 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற வனராணியின் அன்புக் கணவரும், பெரியாம்பி, நடுவிலன், சின்னையா, பாபு, சிவா, சுகந்தன், சிவனேசன், சிவநாதன், திருமகள் ஆகியோரின் அன்புச் சகோதரரும், வாசுகி, சுதா, வக்சலன் ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 09.10.2025 வியாழக்கிழமை இந்தியா சென்னையில் நடைபெறும்.

**தொடர்புகளுக்கு:**
**074 018 1415 (வக்சலன்)**
**+91 739 742 9272 (சுதா)**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 59607) E

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் பேரவையால் தமிழ் மக்களுக்குப் பயனில்லை

## கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.9

தமிழ் மக்களுக்கான நீதியைக் கிடைப்பில் வைத்திருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தேவையற்ற அரங்கு. அதைத்தாண்டி கட்சி அரசியலுக்கு அப்பால் செயற்படுபவர்களுடன் ஒன்றிணைந்து செயற்படத் தயாராக உள்ளோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்குள் தமிழ் மக்களுடைய பொறுப்புக்கூறல் விவகாரம் பேசப்பட்டு சுமார் பத்து வருடங்களுக்கு மேலாகக் கிடப்பில் போடப்பட்டுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தமிழ் மக்களின் பொறுப்புக்கூறல் விவகாரம் மேற்கு மற்றும் இந்திய வல்லரசுகளின் ஒரு கருவியாக மட்டும் பயன்படுத்தப்பட்டுவருகிறது. இவற்றை நாங்கள் அம்பலப்படுத்துவதால் எம்மை ஒரு தரப்பு குறை கூறுகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்குள் தொடர்ந்தும் தமிழ் மக்களுடைய பொறுப்புக்கூறல் விவகாரத்தைத் தக்கவைப்பதற்கு சில தரப்புகள் முயற்சிக்கின்றன. பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு சர்வதேச நீதிமன்றத்தின் ஊடாக தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்குக் கட்சி அரசியலைத்தாண்டி பயணிக்க விரும்புபவர்களுடன் நாமும் இணைந்து செயற்படத் தயாராக உள்ளோம் - என்றார். (எ-20)

## Invitation for Bids (IFB)
## ROAD DEVELOPMENT DEPARTMENT KILINOCHCHI

1. The Chairman Regional Procurement Committee (RPC) on behalf of Road Development Department, Kilinochchi invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.
2. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in Grade mention below table in Highways specialty.
4. Interested eligible bidders may obtain further information from Chief Engineer, Road Development Department, Kilinochchi(Email:- rdd.kilin@gmail.com) from 09.10.2025 until 22.10.2025 from 9.00 am to 3.00pm inspect the bidding documents at the address Chief Engineer's Office, Road Development Department, 155th Mile Post, Kandy Road, Kilinochchi.
5. Qualification requirements to qualify for contract award is given in "section 4 of the qualification information and Section 5 of the Schedule of the procurement document.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chief Engineer, Road Development Department, 155th Mile Post, Kandy Road, Kilinochchi, Telephone 021 228 5461 from 09.10.2025 until 22.10.2025 from 9.00 am to 3.00 pm. Upon payment of a non-refundable fee as mention below table. The method of payment will be by cash.
7. Bids shall be delivered in duplicate to the address at Chairman,Regional Procurement Committee, Road Development Department,155th Mile Post, Kandy Road, Kilinochchi on or before 10.00 am on 23rd October 2025. Late bids will be rejected. Bids will be opened at above place soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
8. All bids shall be accompanied by a "Bid-Security, of an amount and validity date mentioned in the table below.
9. The pre-bid meeting will be held on 21.10.2025 at 10.00 am at the Chief Engineer's Office,Road Development Department, 155th Mile Post, Kandy Road, Kilinochchi.

**Table**

| S.No | Contract No. | Name of the Contract | Estimated Cost without VAT (Rs.Mn) | CIDA Grade Required Highways | Required Bid Security | | Contract period | Non Refundable fee |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount (Rs.) | Validity Period | | |
| 02 | KL/RDD/CE/KL/MN/2025/17 | Constrution of structure at Thirunagar Road | **3.0** | C9 and above | 30,000.00 | 08.01.2026 | 30 days | 3000.00 |

**The Address referred to above is:**

**Chairman,**
**Regional Procurement Committee,**
**Road Development Department,**
**Kilinochchi.**

(CR/46444) J-1

## பெறுகைகளுக்கான அறிவித்தல்
## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்

வைத்தியசாலைகளுக்கு அழுக்குத் துணிகள் சலவைச் சேவையினை வழங்குவதற்கான பெறுகை 2025/ 2026

மேற்படி 02.10.2025 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட பெறுகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட பின்வரும் பெறுகை இலக்கங்களை கொண்ட நிலையங்களுக்குரிய கேள்வி உத்தரவாத முறியானது பின்வருமாறு மாற்றியமைக்கப்படுகின்றது.

| தொ. இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் தன்மை | சேவை வழங்க வேண்டிய நிலையம் | மாற்றியமைக்கப்பட்ட கேள்வி உத்தரவாத முறி |
|---|---|---|---|---|
| 01 | H/LS/2025-2026/01 | அழுக்குதுணிகள் சலவைச் சேவை | ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை, பிரதேச வைத்தியசாலை வல்வெட்டித்துறை, மருதங்கேணி, அம்பன்,கரவெட்டி, ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் பருத்தித்துறை, முள்ளியான் | 15,000.00 |
| 02 | H/LS/2025-2026/02 | | சத்திர சிகிச்சைக் கூடம் ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை | 40,000.00 |
| 03 | H/LS/2025-2026/03 | | ஆதார வைத்தியசாலை சாவகச்சேரி, பிரதேச வைத்தியசாலை வரணி, கொடிகாமம், ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் கைதடி | 15,000.00 |
| 04 | H/LS/2025-2026/04 | | சத்திர சிகிச்சைக் கூடம் ஆதார வைத்தியசாலை சாவகச்சேரி | 30,000.00 |
| 05 | H/LS/2025-2026/06 | | ஆதார வைத்தியசாலை தெல்லிப்பளை, பிரதேச வைத்தியசாலை அளவெட்டி, இளவாலை சுகாதார பராமரிப்பு நிலையங்கள் குரும்பசிட்டி, காங்கேசன்துறை | 25,000.00 |
| 06 | H/LS/2025-2026/07 | | சத்திர சிகிச்சைக் கூடம் ஆதார வைத்தியசாலை தெல்லிப்பளை | 45,000.00 |

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு**
**பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்**
**021-222-3725, 021-222-6253, 021-221-4966**
**தொலைநகல்: 021-222-9971 மின்னஞ்சல்: rdhsjaffna15@gmail.com**

(CR ...445) E

வடக்கு மாகாண

## தனியார் கல்வி நிறுவனங்களை கண்காணிப்புக்குட்படுத்துங்கள்!

யாழ்ப்பாணம், ஒக்.9

வடக்கு மாகாணத்தில் உள்ள தனியார் கல்வி நிறுவனங்களின் சுகாதார வசதிகள் தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கண்காணிப்புகளை மேற்கொள்ளவேண்டும் என வடமாகாண ஆளுநர் அறிவுத்தியுள்ளார்.

வடக்கு மாகாணத்திலுள்ள மாநகர முதல்வர்கள், நகர சபைகளின் தவிசாளர்கள், பிரதேசசபைகளின் தவிசாளர்கள் ஆகியோருடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆயிரக்கணக்கான மாணவர்கள் கற்கின்ற தனியார் கல்வி நிறுவனங்கள் உரிய சுகாதார வசதிகளைக் கொண்டிருப்பதில்லை. பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் ஊடாக அவற்றைக் கண்காணித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## 31ம் நாள் நினைவஞ்சலி



மண்ணில்
09 . 08 . 1934

விண்ணில்
09 . 09 . 2025

**அமரர் இராசமணி மலர்**

மண்ணை விட்டு விண்ணையடைந்து
மாதம் ஒன்று ஆனதம்மா - இறைவன்
பாதம் பணிந்து பிரார்த்திக்கின்றோம் - நின்
நித்திய ஆத்ம சாந்திக்காக நாம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இல. 126/4
கோயில் வீதி
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்

(CS 30544) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணி ஆய்வு மாநாடு

யாழ்ப்பாணம்,ஒக்.9
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் ஐந்தாவது இளங்கலைமாணி ஆய்வு மாநாடு நேற்று நடைபெற்றது.
கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் தலைமையில் ஆரம்பமான மாநாட்டில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானத் துறை ஓய்வுநிலைப் பேராசிரியர் எஸ். சந்திரபோஸ் சிறப்புரையை ஆற்றினார். "வெவ்வேறு துறைகளை இணைத்து மாற்றங்களை வலுவூட்டுவதற்காக அறிவைச் செயற்படுத்துதல்" எனும் தொனிப்பொருளோடு 16 ஆய்வுத் தடங்களில் இந்த மாநாடு நடைபெற்றது. இளங்கலைமாணி பட்டக்கற்கையின் இறுதியாண்டில் மாணவர்கள் நிறைவுறுத்திய ஆய்வுகளின் அளிக்கையாக இம்மாநாடு அமைந்தது. அவை ஆய்வுச் சுருக்கங்களாக மாநாட்டின் ஆய்வடங்கல் மூலமும் வெளியிடப்பட்டன. நிகழ்வில் முதன்மை விருந்தினராகப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா கலந்துகொண்டார். (க-20,66)

# மின்னல் எச்சரிக்கை

பலத்த மின்னல் தாக்கம் தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.
வடக்கு, வடமத்திய, மத்திய கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் இடியுடன் கூடிய மழைவீழ்ச்சி பதிவாகும் சாத்தியம் காணப்படுவதுடன் பலத்த மின்னல் தாக்கம் ஏற்படக்கூ டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# சூதாட்ட வரி அதிகரிப்பு வர்த்தமானி வெளியீடு

கொழும்பு,ஒக்.9
பந்தயம் மற்றும் சூதாட்ட வரி (திருத்தம்) மீதான வர்த்தமானி ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும்வகையில் வெளியிடப்பட்டுள்ளது.
அதற்கமைவாக சூதாட்ட வணிகங்களுக்கான வரி, ஒரு சூதாட்டக்காரர் அல்லது சூதாட்ட இயக்குநரின் வணிகத்தை நடத்தும் அனைத்து நபர்களுக்குமான வரி 15 வீதத்தில் இருந்து 18 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (க-இ)



# காரைநகரில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஒக்.9
யாழ்.மாவட்டச் செயலகம், காரைநகர்ப் பிரதேச செயலகம் ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில் நடமாடும் சேவை நிகழ்வு காரைநகர் பிரதேச செயலாளர் ந.ரஞ்சனா தலைமையில் பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலர் ம. பிரதீபன், சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் பிரதேச்சபையின் தவிசாளர் கிருஷ்ணன் கோவிந்தராசன், யாழ்.மாவட்ட மேலதிக செயலர் கை.சிவகரன், உதவி மாவட்டச் செயலர் உ.தர்சினி, காரைநகர் பிரதேசசபையின் செயலாளர் சு.சுதர்ஜன் உள்ளிட்டோருடன் மாவட்டச் செயலகப் பிரதம கணக்காளர், அதிகாரிகள், மாவட்டச் செயலக மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-25,66,40)

## வடக்கு ஆளுநர் குழுவால்
# மன்னார் மருத்துவமனை அபிவிருத்திகள் ஆராய்வு!

மன்னார்,ஒக்.9
மன்னார் மாவட்டப் பொதுமருத்துவமனைக்கு வடமாகாண ஆளுநர் என்.வேதநாயகன் தலைமையில் விசேட குழுவினர் நேற்றுச் சென்று அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தனர். இதன்போது மருத்துவமனையில் புனரமைக்கப்பட்ட மருத்துவப் பரிசோதனை நிலையங்கள் திறந்துவைக்கப்பட்டதைத் தொடர்ந்து விசேட கூட்டம் இடம்பெற்றது.
இதில் மருத்துவமனையில் உள்ள பல்வேறு குறைபாடுகள் குறித்து மருத்துவமனை அபிவிருத்திக் குழு உறுப்பினர்களால் ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.
குறிப்பாக தேவைகள் மற்றும் மருத்துவமனையிலுள்ள அதிகமான கட்டடங்கள் பழமை வாய்ந்த கட்டடங்களாக உள்ளமையினால் அவற்றை மாற்றியமைத்தல் மற்றும் நவீன வசதிகளை ஏற்படுத்துதல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன.
மேலும் நோயாளிகள் எதிர்கொள்ளும் அசௌகரியங்கள், அதற்காக முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.
இதன்போது மன்னார் மாவட்டப் பொதுமருத்துவமனையில் நிலவும் அனைத்துப் பிரச்சினைகளையும் நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுப்போம் என வடமாகாண ஆளுநர் தெரிவித்தார். (ச-56)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் ஆசிரியர் மாணவர் மன்றம் நடத்திய ஆசிரியர்தின விழா நேற்றுக் கலாசாலை ரதிலக்சுமி மண்டபத்தில் நடைபெற்றது. கலாசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலாசாலையின் பழைய மாணவரும், முன்னாள் விரிவுரையாளரும், யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளருமாகிய அ .சத்தியகுமார் கலந்துகொண்டார். (ச-9,66)

## தமிழ்த் தினப்போட்டி
# கரணவாய் ம.வி. மாணவி தேசியமட்டத்தில் முதலிடம்



யாழ்ப்பாணம்,ஒக்.9
அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டி யில் பிரிவு 3 கட்டுரை எழுதுதலில் கரணவாய் மகா வித்தியாலய மாணவி யோகநேசன் ரம்மியா தேசியமட்டத்தில் முதலாமிடம் பெற்றுள்ளார்.
இந்தப்போட்டி கடந்த 5 ஆம் திகதி கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியில் இடம்பெற்றது. (ச)

# புதிய வட்டாரங்களுக்கும் ஆதனவரி அறவிடப்படும்

## *கரைச்சி தவிசாளர் தெரிவிப்பு*

கிளிநொச்சி, ஒக்.9
ஆதனவரி தொடர்பாக காணப்படும் பிரச்சினை களைத் தீர்த்துக்கொண்டு புதிய வட்டாரங்களுக்கும் ஆதனவரி விதிக்கப்படும் எனக் கரைச்சிப் பிரதேசசபைத் தவிசாளர் அ. வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.
கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே குறித்த விடயத்தை அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,
ஆதனவரி தொடர்பாக மக்கள் பல்வேறு முறைப்பாடுகளைத் தெரிவித்துள்ளநிலையில் அவற்றினை மீள்பரிசீலனை செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புதிதாக பரந்தன் வட்டாரத்துக்கான ஆதனவரிக்கான மதிப்பீடு செய்யப்பட்டு ஆதனவரி அறவீடு செய்யும் பணியும் முன்னெடுக்கப்படவுள்ளது. இதேவேளை பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பராமரிப்பு இன்றிக் காணப்படும் காணிகள் கரைச்சிப் பிரதேசசபையினால் துப்புரவு செய்யப்பட்டு பராமரிக்கப்படவுள்ளன. கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் வட்டார ரீதியாக பெண் நாய்களுக்குக் கருத் தடை மேற்கொள்ளப்படும் - என்றார். (ச-25,113)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியில் கடந்த திங்கட்கிழமை உலக ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டது. ஆசிரியப் பயிலுநர்களால் முன்னெடுக்கப்பட்ட இந்த நிகழ்வில் கல்லூரியின் விரிவுரையாளர்கள் மாலை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டனர். இதன்போது கலைநிகழ்வுகளும் சிறப்புரைகளும் இடம்பெற்றன. (எ-159)




கிளிநொச்சியில் பெண்கள் வாழ்வுரிமைச் சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச முதியோர்தினமும் முதியோர்களுக்கான உலருணவுப்பொருள்கள் வழங்கலும் பெண்கள் வாழ்வுரிமைக் கழகத்தைச் சேர்ந்த கமலினி தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற்றன. (ச-41-55)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக்.9

முத்தமிழ் கலைஞர் மேம்பாட்டு மன்றத்தின் மாதாந்த வெளியீடான "கலைஞனின் குரல்" இதழ் 3 இன் வெளியீட்டு விழா அதன் ஆசிரியர் இரா.மதிகரன் தலைமையில் கடந்த சனிக்கிழமை பாசையூரில் நடைபெற்றது.

நிகழ்வில் அறிமுகவுரையை எழுத்தாளர் செ.யோசேப்பாலாவும், வெளியீட்டுரையை மயூரிகா செல்வராசாவும், தொகுப்புரையை "காந்தீயம்" பத்திரிகை ஆசிரியரும் மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளருமான எம். ஷாந்தன் சத்தியகீர்த்தியும், சிறப்பு ரையை சுதந்திர மனித உரிமைகள் அமைப்பின் வடமாகாணப் பணிப்பாளர் புண்ணியமூர்த்தியும் வழங்கினர். (எ-41-159)





நல்லெண்ண நோக்கில் உரும்பிராய் சந்தியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மரநடுகை இடம்பெற்றது. வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையின் தவிசாளர் உட்பட உரும்பிராய் மேற்கு உறுப்பினர் ச. கேசவன், தெற்கு உறுப்பினர் நிசாந்தன் மற்றும் தமிழரசுக் கட்சியின் உரும்பிராய் பிரதிநிதி சுஜீவன் ஆகியோரின் கூட்டிணைவில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (எ-25)





ஏர் நிலம் தொண்டமைப்பின் ஏற்பாட்டில், "அமுதம் கல்வித் திட்டம்" 5ஆவது ஆண்டு விழா கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்க மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. ஏர் நிலம் தொண்டமைப்பின் நிறுவுநர் சுவிற்சர்லாந்து வாழ் து.திலக், நிர்வாக இயக்குநர் தனம் நித்தி ஆகியோரின் ஒழுங்கமைப்பில், அமைப்பின் பிரதான ஆலோசகர், மேனாள் முதல்வர் கலாநிதி சூரியகுமாரி இராசேந்திரம் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. (எ-25)






மன்னார் மாவட்ட பூப்பந்தாட்ட அணிகள், தேசிய ரீதியில் இரு இடங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளன. தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற, தேசிய பூப்பந்தாட்டப் போட்டியில் ஆண்கள் அணி மூன்றாம் இடத்தையும், பெண்கள் அணி நான்காம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. இந்தப் போட்டியில் இரு அணிகளும் முதன்முறையாகப் பங்குபற்றியுள்ளன . (க-58)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெனிவாவை...

அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும், அங்கு மேற்கொள்ளப்படும் தீர்மானங்களும் அரசியல் இருப்புக்காகவே கடந்த காலங்களில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. அவ்வாறான செயற்பாடுகளில் நாங்கள் ஒருபோதும் ஈடுபடப்போவதில்லை. அதுபோல், அத்தகைய செயற்பாடுகள் ஈடுபடுவதற்கு எவரையும் அனுமதிக்கவும் மாட்டோம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வெளிவிவகார அமைச்சர் தெளிவுபடுத்திவிட்டார். ஜெனிவாத் தீர்மானத்துடன் நாங்கள் உடன்படவில்லை என்று திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த நிலைப்பாட்டில் நாங்கள் எப்போதும் மாற்றங்களைச் செய்ய மாட்டோம்.

கடந்த காலங்களில் இலங்கையின் நீதித்துறையின் சுயாதீனம் தொடர்பில் உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் சந்தேகங்கள் இருந்தன. ஆனால், தற்போது நீதித்துறையின் சுயாதீனம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில், நீதித்துறையின் சுயாதீனம் எவ்வளவுதூரம் மேம்பட்டுள்ளது என்பதை நாங்கள் நிரூபித்துக் காட்டியுள்ளோம். ஆதலால், இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு சர்வதேசம் தேவையில்லை என்பதே எமது நிலைப்பாடு - என்றார். (அ-ம-44)

## 16,966...

இது தொடர்பில் அந்தக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக இலங்கையால் அமைக்கப்பட்டுள்ள குழுவின் செயற்பாடுகள் மற்றும் அதன் வினைத்திறன் தொடர்பில் நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதில், இலங்கையிடம் சரியானதொரு பொறிமுறை இல்லை என்பதை நாங்கள் கண்டறிந்துள்ளோம். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் விசாரணை நடத்தும் பணியகத்திடம் வழங்கப்பட்ட 16 ஆயிரத்து 966 முறைப்பாடுகளில் 23 முறைப்பாடுகளுக்கு மட்டுமே தீர்வு வழங்கப்பட்டுள்ளது.

தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டறிவதற்காக, பெரும் எதிர்பார்ப்புடனும், ஏக்கத்துடனும் காத்திருப்போருக்கு, இந்த மந்தமான செயற்பாடுகள் ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளன. காணாமல் ஆக்கப்பட்டோரின் விடயத்தில் அதி விரைவாகச் செயற்பட வேண்டியதன் அவசியத்தை இலங்கை உணர வேண்டும். வழங்கப்பட்ட அனைத்து முறைப்பாடுகளுக்கும், முறையான பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தவேண்டும் - என்றுள்ளது. (அ-ம-ச-இ)

## அரியாலை...

தமது போராட்டத்தில் ஒரு பகுதியாக அவர்கள் வீதி மறியலிலும் ஈடுபட்டனர்.

அரியாலையில் திண்மக் கழிவகற்றல் மையமொன்றை அமைக்கும் நடவடிக்கையில் அண்மைக்காலமாக நல்லூர் பிரதேசசபை ஈடுபட்டு வருகின்றது. இதற்கு பிரதேச மக்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர். இதன் தொடர்ச்சியாகவே, நேற்று இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள், நல்லூர் பிரதேசசபையின் தவிசாளர் சம்பவ இடத்துக்கு வருகை தரவேண்டும் என்று வலியுறுத்தினார்கள். அவர்களின் கோரிக்கை தவிசாளருக்குத் தெரியப்படுத்தப்பட்டதும், அவர் சம்பவ இடத்துக்குச் சென்றார். இதன்போது, தவிசாளர் மயூரனுடன் மக்கள் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன், 'அரியாலைக்குள் குப்பைகளுடன் நுழையும் வாகனங்களுக்குச் சேதம் ஏற்பட்டால், அதற்குத் தாங்கள் பொறுப்பல்ல' என்றும் கூறினார்கள். தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவொன்றையும் தவிசாளரிடம் கையளித்தனர்.

இதைத் தொடர்ந்து, வாகனப் பேரணியாக ஆளுநர் அலுவலகம் வரை சென்ற பொதுமக்கள், ஆளுநரிடமும் மனுவொன்றைக் கையளித்தனர். (அ-ம-20-26-66)

## ஹன்டருடன்...

உயிரிழந்தார். யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு பகுதியைச் சேர்ந்த வேலன் கனகலிங்கம் (வயது-69) என்ற வயோதிபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

பலாலி வீதியில் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் கடந்த 5ஆம் திகதி இந்த விபத்து சம்பவித்தது. இதன்போது மோட்டார்சைக்கிளில் பயணித்த குறித்த வயோதிபரும், அவருடைய மனைவியும் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தனர். இந்த நிலையில், மேலதிக சிகிச்சையின்போது, நேற்று அந்த முதியவர் உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26)

## அரியாலையில்...

அரியாலையில் அமைக்கப்பட்டு வருவது குப்பைகளைச் சேகரிக்கும் நிலையமல்ல. மாறாக, குப்பைகளைத் தரம் பிரிக்கும் நிலையம் மட்டுமே. அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக மக்களை சிலர் தவறாக வழிநடத்துகின்றனர் - இவ்வாறு நல்லூர் பிரதேசசபையின் தவிசாளர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நல்லூர் பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் திண்மக் கழிவுகளை தரம் பிரிக்கும் நிலையமே அரியாலை பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது. மக்கள் நினைப்பதுபோல் அது குப்பை கொட்டும் மையம் அல்ல. இந்த விடயத்தை நான் தெளிவாக வலியுறுத்த விரும்புகின்றேன்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் உரிய அனுமதிகள் பெறப்பட்டே பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால், சிலர் மக்களைத் தொடர்ச்சியாகக் குழப்பி வருகின்றனர். தங்களின் தனிப்பட்ட தேவைக்காக மக்களைத் தவறாக வழிநடத்துகின்றனர். இது கண்டிக்கத்தக்க விடயமாகும்.

வடமாகாண ஆளுநரிடம் திண்மக் கழிவகற்றலுக்கு பொருத்தமான திட்டத்தை கோரியுள்ளோம். அவர் வேறேதும் திட்டத்தைப் பரிந்துரைத்தால், இந்த இடம் தொழிற்பேட்டையாக மாற்றப்படும். ஊருக்கு ஒதுக்குப்புறமாக உள்ள மயானத்துக்கு அருகிலேயே இந்தக் குப்பை சேகரிக்கும் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதை சுற்றுலாப் பகுதி என்று கூறுவதும் பொய்யான தகவல் - என்றார். (அ-ம-20)

## ஷானியின்...

அபேசேகர மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் அதிகாரிகள் இருவர் கைது செய்யப்பட்டதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மூன்று அடிப்படை உரிமை மனுக்களை விசாரணை செய்வதற்கு உயர்நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

ஷானி அபேசேகர, சுகத் மெண்டிஸ் மற்றும் நவரத்தின பிரேமரத்ன ஆகியோர் 2021ஆம் ஆண்டு கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர். இந்தக் கைது நடவடிக்கையை எதிர்த்து, ஷானி அபேசேகர தரப்பால் அடிப்படை மனித உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்கள் மீதான விசாரணை, நீதிபதிகள் மஹிந்த சமயவர்த்தன, பிரியந்த பெர்னாண்டோ மற்றும் சோபித ராஜகருணா ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று பரிசீலனைக்கு வந்தது. வழக்காளியின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவின் சட்ட நிறுவனத்தின் அனுசரணையில், சட்டத்தரணி தர்மஜா தர்மராஜாவின் ஆலோசனைக்கு அமைய, சிரேஷ்ட சட்டத்தரணி சாந்த ஜெயவர்த்தன, சட்டத்தரணி ஓஷதி கனீஷா ஹப்புஆராச்சி ஆகியோர் முன்னிலையானார்கள். சட்டத்தரணிகளின் சமர்ப்பணங்களைத் தொடர்ந்து, மூன்று அடிப்படை உரிமை மனுக்களையும் விசாரணை செய்வதற்கு உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தனவுக்கு எதிரான வழக்குத் தொடர்பில் எழுவரும் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-க-இ)

## விசாரணை...

முன்னாள் அமைச்சர்கள் பத்துப் பேருக்கு எதிராக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

பொலிஸாருக்கு வழங்கப்பட்ட பல்வேறு முறைப்பாடுகளைத் தொடர்ந்தே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தொடர்புடைய அனைவருக்கும் எதிராகத் தனித்தனியாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும், விரைவில் அவர்களிடம் சாட்சியங்கள் பெறப்படவுள்ளன என்றும் அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-ம)

## புதைகுழி...

உருவாக்கவேண்டும் இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

இலங்கையில் தற்செயலான நடவடிக்கைகளின்போது 17 மனிதப்புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எனினும், அங்கு முறையான அகழ்வுப் பணிகளை மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்படுகின்றது. குறிப்பாக, அதிகாரிகளிடையே வரையறுக்கப்பட்ட தடயவியல் திறனே காணப்படுவதுடன், தேசிய மரபணுத் தரவுத்தளம் இல்லாதமை பெரும் குறைபாடாக அமைந்துள்ளது.

புதைகுழிகளைக் கண்டுபிடித்து அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளவும், ஆய்வுகளை முன்னெடுக்கவும், விசாரணைகளைச் செய்வதற்கும் விரிவான உத்திகளை இலங்கை வகுக்கவேண்டும். இதற்கு தேசிய நிறுவனங்களின் தகுதியையும், திறமையையும் மேம்படுத்துவதுடன், உரிய தொழில்நுட்ப உதவிகளையும் பெற்றுக்கொடுக்க வேண்டும் - என்றுள்ளது. (அ-ம-ச-இ)


## மின்கட்டணம்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மின் கட்டணம் தொடர்பில் மின்சார சபை மேற்கொண்ட முன்மொழிவை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு பரிசீலித்து வருகின்றது. இன்னமும் இறுதி முடிவுகள் எவையும் எடுக்கப்படவில்லை. எனவே, மின் கட்டணம் குறைக்கப்படும் என்றோ அல்லது அதிகரிக்கப்படும் என்றோ வெளிவரும் தகவல்களில் எந்த உண்மையும் இல்லை.

முதலீட்டாளர்கள் மற்றும் தொழில்துறை சார்ந்தவர்களின் கோரிக்கைகளுக்கு அமையவே தீர்மானம் எடுக்கப்படும். எனவே தீர்மானம் எதுவாக இருந்தாலும், அது மின்சார ஊழியர்களுக்கு எந்த வகையிலும் பாதிப்பாக அமையாது - என்றார். (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 3 விஞ்ஞானிகளுக்கு இயற்பியல் நோபல் விருது

வொஷிங்டன்,ஒக்.9
அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸைச் சேர்ந்த 3 விஞ்ஞானிகளுக்கு இயற்பியலுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம், அமைதி, பொருளாதாரம் ஆகிய துறைகளில் சாதனை படைப்போருக்கு ஆண்டுதோறும் நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

அமெரிக்காவைச் சேர்ந்த ஜோன் எம். மார்டினிஸ், பிரிட்டனைச் சேர்ந்த ஜோன் கிளார்க், பிரான்ஸை சேர்ந்த மைக்கேல் டெவோரெட் ஆகியோர் இந்த ஆண்டு இயற்பியல் நோபல் பரிசுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மூன்று விஞ்ஞானிகளும் தற்போது அமெரிக்காவின் கலிபோர்னியாப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வருகின்றனர். குவாண்டம் ஊடுருவல் குறித்த ஆய்வுக்காக அவர்களுக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு பந்தைச் சுவரில் எறிந்தால், அந்தப் பந்து திரும்பிவரும். இது அனைவரும் அறிந்த இயற்பியல் நிகழ்வு ஆகும். ஆனால் சில நுண்ணிய துகள்கள் சுவரைத் துளைத்து மறுபக்கம் செல்கின்றன.

இதுவே குவாண்டம் ஊடுருவல் என்று அழைக்கப்படுகிறது. கடந்த 1984, 1985ஆம் ஆண்டுகளில் குவாண்டம் ஊடுருவலை 3 விஞ்ஞானிகளும் அறிவியல்பூர்வமாக நிரூபித்தனர்.

இந்தச் சாதனைக்காக அவர்கள் நோபல் பரிசுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். (ச-இ)



# 3 விஞ்ஞானிகளுக்கு மருத்துவ நோபல் பரிசு

வொஷிங்டன்,ஒக்.9
மருத்துவத்துக்கான நோபல் பரிசு, நோய் எதிர்ப்புத்தன்மை தொடர்பான கண்டுபிடிப்புகளுக்காக மேரி இபி ரன்கோவ், ப்ரெட் ராம்ஸ்டெல், ஷிமோன் சகாகுச்சி ஆகிய மூன்று விஞ்ஞானிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள், உடலின் நோயெதிர்ப்பு மண்டலத்தின் பாதுகாவலர்கள், ஒழுங்குமுறை டி செல்கள் ஆகியவற்றை அடையாளங் கண்டுள்ளனர். இவை, புதிய ஆராய்ச்சித்துறைக்கு வித்திட்டுள்ளன. இந்தக் கண்டுபிடிப்பு கள், மருத்துவப் பரிசோதனைகள் மூலம் மதிப்பீடு செய்யப்படும் சிகிச்சை முறையின் வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளன. குறிப்பாக, புற்றுநோய் சிகிச்சைகளை வழங்குவதில் இந்தக் கண்டுபிடிப்புகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. (ச-இ)

# சிறுவர்தின விழா

யாழ்ப்பாணம்,ஒக்.9
சாவகச்சேரிப் பிரதேசசபையின் சரசாலை பொதுநூலகத்தின் சிறுவர்தினவிழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சரசாலை பொது நூலகத்தில் நடைபெறும்.

சாவகச்சேரிப் பிரதேசசபைத் தவிசாளர் பொ.குகதாசன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் சாவகச்சேரிக் கிளை முகாமையாளர் த.கபிலன், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரிப் பிரதேசசபையின் செயலாளர் தி.சுதர்சன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (க-159)

# ஏ.ரி.எம். ஊடாக பஸ் கட்டணம்

ஏ.ரி.எம். அட்டைகளைப் பயன்படுத்தி பயணிகள் பேருந்துக் கட்டணங்களைச் செலுத்தும்முறைமையை அனுமதிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதற்கமைவாகப் பயணச்சீட்டு இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ள பேருந்துகளில் இந்தக் கட்டணம் செலுத்தும் முறை அனுமதிக்கப்படவுள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க நாடாளுமன்றில் இதனைத் தெரிவித்துள்ளார். இது எதிர்வரும் நவம்பர் மாதம் 30ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என்றும் அவர் தெரிவித்தார். (சு-இ)

## காணி தேவை

யாழ். ஆரியகுளத்தை அண்டிய பகுதியில் 2 தொடக்கம் 5 பரப்பளவை கொண்ட காணி விலைக்குத் தேவை.

0777 44 44 07


## கட்டடம் அல்லது வீடு வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணம் நாவலர் வீதி, பிறவுண் வீதி, மற்றும் ஆரியகுளம் சுற்று வட்டத்தை கொண்ட பகுதியில் தனியார் கல்வி நிலையம் நடத்துவதற்கு கட்டடம் அல்லது வீடு தேவை.

077 95 92 628

## முதலாம் மாத நினைவஞ்சலி

தோற்றம்
27 . 10 . 1947



மறைவு
07 . 09 . 2025

அமரர் கைலாசபிள்ளை பஞ்சரட்ணம்

ஓர் அன்பான இதயம், அருமையான மனிதர்
தங்கள் கோபமும் சில நொடிகள் தான்
ஒரு மாதம் கடக்கையிலே ஓராயிரம் நினைவலைகள்
உள்ளத்தைக் கழுவி வெறுமைப்படுத்துகிறது
நல்லதோர் வழிகாட்டியாய் இருந்தீர்கள்
இன்று உங்கள் குரல் மட்டும் ஒலிக்கவில்லை இருந்தும்
அத்தடத்தில் என்றும் கண்ணியமாய் தொடர்வோம் எம் பயணத்தை
வையக வாழ்வுதனில் குறைகள் ஏதும் இல்லை
விண்ணுலகம் தனிலும் வாழ்வாங்கு வாழ
என்றும் பிரார்த்திப்போம்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

"யோகஸ்தி"
மானிப்பாய் தெற்கு
மானிப்பாய்

என்றும் நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CS 59605) E

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org